ஒலைவரி வழங்கியது — நல்லூர் கீரை நாலைந்து
Registered as Newspaper

யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B M C, Lane, JAFFNA

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆனி மீ 16 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 21 (30 06 1986) UTHAYAN: A JAFFNA TAMIL DAILY கதிர்: 191

மாகாண சபைகள்:

# கூட்டணி முடிவு போராளிகளின் அனுசரணையுடன் தான்

சென்னை, ஜூன் 29

மாகாணசபைகளின் அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கம் நடத்தும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொள்வதா?

அரசியல்கட்சி மாநாடு நடந்து முடிந்த பின்னர் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதா?

அல்லது எதிலுமே கலந்துகொள்ளாது விடுவதா?

விடுதலைப் போராளிகள் அமைப்புகளைக் கலந்தாலோசித்து அவற்றின் அனுசரணையுடனேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இவற்றில் ஒரு முடிவுக்கு வரும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருங்கிய வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன,

இதற்கிடையில் மாகாணசபை யோசனைகள் குறித்து கூட்டணியின் அரசியல் குழு நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

மீண்டும் புதன்கிழமையன்று இது குறித்து ஆராய்வதற்காக அரசியல் குழு கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## கிளிநொச்சியில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து பரந்தன் பகுதிகளை நோக்கி... [see below]

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து நேற்றும் "ஷெல்" தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பரந்தன் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட இந்த 'ஷெல்' தாக்குதல்களால் பல பொதுமக்கள் காயமடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த ஷெல் தாக்குதல்களை அடுத்து பரந்தன் பாதைகள் ஊடாகச் செல்லும் சில வாகனங்களை போராளிகள் தடுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அன்னையின் பாசமும் கண்ணீர்க் கதையும்!

திருகோணமலை, ஜூன் 30

தம்பலகமம் கிராமத்தில் இருந்து ஒரு கண்ணீர்க் கதை!

"அவர்களை விட்டு விடுங்கள்; அல்லது என்னையும் கடத்திச் செல்லுங்கள்"—இப்படி தமிழ்த் தாய் ஒருத்தி ஊர்காவல் படையினரிடம் கெஞ்சினாள்.

ஊர்காவல் படையோ அந்தத் தாயையும் சேர்த்து 16 தமிழரைக் கடத்திச் சென்றது

திருமதி கனகம்மா சபாரத்தினம் என்ற அந்தத் தமிழ்ப் பெண் உட்பட கடத்தப்பட்ட 16 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவில்லை.

இது பற்றி அவரின் மகன் சந்தளாய் பொலீஸில் முறைப்பாடு செய்யச் சென்று இருந்தார்

திருமதி சபாரத்தினம், தம்பலகமம் லக்ஷ்மி அரிசி ஆலை முதலாளி சபாரத்தினத்தின் மனைவி.

கடத்தப்பட்ட சமயம் ஆலையில் 15 தமிழர் இருந்தனர்.

முதலாளி சபாரத்தினம் பாரிசவாத நோயாளி.

ஊர்காவல் படையினர் அவரைக் கடத்திச் செல்லவில்லை

15 தமிழர்களை மட்டுமே கடத்திச்செல்ல எத்தனித்தனர்.

திருமதி சபாரத்தினத்தால் அதை பொறுக்க முடியவில்லை.

"அவர்களைக் கடத்திச் செல்ல வேண்டாம்; அவர்கள் எனக்குப் பிள்ளைகள் போன்றவர்கள் அவர்களைக் கொண்டு போவது என்றால் என்னையும் கொண்டு போங்கள்"— இப்படி அவர் ஊர்காவல் படையினரிடம் சொன்னார். நீங்கள் வேண்டாம். 15 பேரையும் கொண்டு போகிறோம் என்று படையினர் கூறினராம். அப்படிச் சொல்லி அவர்களை படையினர் கூட்டிச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 264 தமிழருக்கு என்ன நடந்தது?

### பிரசைகள்குழு அதிர்ச்சி

திருகோணமலை, ஜூன் 30

அண்மையில் திருகோணமலை நகரைச் சுற்றி வளைத்து நடத்தப்பட்ட தேடுதலில் கைதானவர்களில் 264 பேருக்கு என்ன நடந்தது? இதுபற்றி ஆராய்ந்து மேலிடத்துக்கு முறையிடுவதில் திருகோணமலைப் பிரசைகள்குழு நேற்று முழுவதும் ஈடுபட்டிருந்தது

இம்மாதம் 24ஆம் திகதி ஆயுதப்படையினர் திருகோணமலை நகரை நான்கு மூலைகளிலும் இருந்து ஒரே நேரத்தில் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கைது செய்தது தெரிந்ததே

திருகோணமலை பிரசைகள்குழு தயாரித்துள்ள பட்டியலின்படி 1,300 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்

ஆனால் பாதுகாப்புவட்டாரங்கள் பிரசைகள் குழுவுக்கு வழங்கிய பட்டியலின்படி கைதுசெய்யப்பட்டவர்கள் 1036 பேர் என்றே அறிவிக்கப்பட்டது

அப்படியானால் பிரசைகள் குழுவின் பட்டியலின்படி மேலதிகமாக கைதான 264 பேருக்கு என்ன நடந்தது?

கைது செய்யப்பட்டும் பாதுகாப்பு வட்டாரத்தின் பட்டியலில் இடம் பெறாத தமிழர்களின் உறவினர்கள், இதுபற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முருகர்



ஓ, ஓம் கழித்தல் கணக்குச் செய்கிறதில்லை செட்டிக்காரரைத் தேடித்தான் உந்தப்படையினை சேர்க்கிறவை போல....!

### போககுவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

சனிக்கிழமை பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் பாலம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால் அப்பாதையூடாக சென்ற வாகனங்கள் யாவும் பரந்தனில் உள்ள வயல்வெளிகள் ஊடாகவும் சிறிய ஒழுங்கைகள் ஊடாகவும் போக்குவரத்தைத் தொடர்ந்தன.

(உ-10)

## யாழ். மாவட்ட வானில் மர்ம ஜெட்

### பாதுகாப்பு வட்டாரங்கள் கவலை

கொழும்பு, ஜூன் 30

மர்ம ஜெட் விமானம் ஒன்று நான்கு தடவைகள் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு மேலாகப் பறந்து சென்றது.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பில் இருந்து வெளியாகும் 'வீக்கென்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டது

வட பகுதியில் உள்ள இராணுவ நிலைகளைப் படம் பிடிப்பதில் இந்த விமானம் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது

12 ஆயிரம் அடி உயரத்தில் இந்த விமானம் பறந்து சென்றது. அது ஒரு ஜெட் விமானம்

பலாலி தளத்தில் உள்ள ராடர் உபகரணம் இந்த விமானம் பறந்து சென்றதைப் பதிவு செய்தது இப்படி வீக்கென்ட் செய்தி தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா கருத்து

கொழும்பு, ஜூன் 30

மாகாண சபைத் திட்டம் ஏற்கப்பட்டவுடன் யுத்த நிறுத்தம் ஒன்றுக்குத் தமிழ்ப்போராளிகளை இணங்கும்படி இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார். (எ - 2)

இலங்கை அரசின் புதிய திட்டம்:

## எம்.ஜி ஆர். போராளிகளிடம் உத்தியோகபூர்வ கையளிப்பு

சென்னை, ஜூன் 29

இலங்கை அரசின்புதிய யோசனைகள் அடங்கிய திட்டம் கடந்த ஞாயிறு தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களிடம் தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

முதலமைச்சரின் இல்லத்தில் வைத்து திட்டம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜி கருப்பையா மூப்பனார், தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோரும் சமுகமளித்து இருந்தனர்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ்ஈழ விடுதலை இயக்கம் ஆகிய 5 அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் திட்டத்தின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்

இணைஅமைச்சர் திரு பி. சிதம்பரம் கடந்த வார இறுதியில் தமிழகம் வந்திருந்தார். அப்போது இலங்கை அரசின் மாகாண சபைத் திட்டம் உத்தியோகப் பற்றற்ற ரீதியில் வெளியாகி இருந்தது.

அதனைத் தொடர்ந்து மாகாணசபைத் திட்டம் தமிழர்களின் அபிலாஷைகளை எவ்வகையிலும் பூர்த்திசெய்யவில்லை என்று கூறி அதனை நிராகரித்து விடுதலை அமைப்புப் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

(அ-எ)

பாலம்பட்டாறு:

## கடத்தப்பட்ட 18 தமிழர்களில் 6 பேர் சடலமாக கண்டுபிடிப்பு

### புலிகள் மீட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தம்பலகமத்துக்கு அருகில் பாலம்பட்டாறு என்னும் இடத்தில் ஊர்காவல் படையினரால் கடத்தப்பட்ட 18 தமிழரில் 6 பேரின் சடலங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த சனிக்கிழமை காட்டில் இருந்து மீட்டனர்.

ஏனைய 12 பேர் குறித்துத் தேடுதல் நடத்தப்படுகிறது.

ஊர்காவல் படையினருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய மோதலின் பின்னர் தான் 6 தமிழரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்த மோதலில் இறந்த இரண்டு ஊர்காவல் படையினரின் சடலங்களையும் புலிகள் எடுத்து வந்தனர்.

அத்துடன் காட்டில் நகைகளுடன் காணப்பட்ட வான் ஒன்றையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ-6)

## வெடிமருந்துகள் புலிகளினால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த சனிக்கிழமையன்று கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் இராணுவத்தினருடன் நடத்திய நேரடி மோதலின்போது இராணுவத்திடமிருந்து கணிசமான அளவு வெடிமருந்து கைப்பற்றப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகள் இப்படித் தெரிவித்தனர்

கடந்த 26 ஆம் திகதி கிரானில் பொலீஸ் கமாண்டோக்களுடன் நிகழ்ந்த மோதலில் எம் மண்ணின் மீட்புக்காக மேஜர் ஜிம்கெலி, சிந்து, சைமன், சரவணன் ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

சனியன்று திருமலை மாவட்டத்தில் அருத்தோயா என்னுமிடத்தில் பிற்பகல் 4 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது பல இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளை வாசுதேவ சந்தித்து பேச்சு நடத்துவார்

கொழும்பு, ஜூன் 30

நவ சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரவும் தமிழ் நாடு விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்திக்க இருக்கின்றார். இத்தகவலை அவரே வெளியிட்டார்.

திரு. நாணயக்கார அடுத்த வாரம் பம்பாய் செல்லவிருக்கிறார். அங்கு தொழிற் சங்க மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு விட்டு திரும்பும் வழியில் தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகளையும் திரு. நாணயக்கார சந்திப்பார். (எ-2)

## ஐக்கிய இலங்கைக்குள்ளான எத்தீர்வையும் ஏற்கும் நிலையை

### நாம் தாண்டிவிட்டோம் - பிரபா

சென்னை, ஜூன் 29

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு எதையும் காணும் கட்டத்தை நாங்கள் தாண்டிவிட்டோம். ஈழக்கோரிக்கையிலிருந்து மீள முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

ஈழம் அமைப்பதற்கான திகதி குறிப்பிடப்படாவிட்டாலும் ஈழம் அமைந்தே தீரும்.

'இந்தியா ருடே' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரன் இப்படித் தெரிவித்தார்

நாம் சோசலிச கூட்டிற்கு நெருக்கமானவர்களாக நிச்சயம் இருக்க



விரும்புகிறோம். ஏனெனில் அவர்கள்தாம் எமக்கு இப்போது உதவுகிறார்கள்.

இந்தியாவின் மத்தியஸ்த முயற்சியை வரவேற்கிறோம். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு இந்தியா விரும்பினாலும் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு எதிராக அது போகக் கூடாது.

ராஜீவின் அனுதாபம்

எங்களை இந்தியாவிலிருந்து புறப்படுமாறு ராஜீவ் கேட்பார் என நான் நினைக்கவில்லை. ஆனால் அப்படிக் கேட்டால் நாம் போகத்தான் வேண்டும். எமது தாயகம் எப்போதும் எமக்காக நீண்ட கரங்களுடன் காத்திருக்கிறது. எனினும் ராஜீவின் அனுதாபம் தமிழரின் பக்கம் இருக்குமென்றே நாம் கருதுகிறோம்.

— இவ்வாறு திரு. பிரபாகரன் தெரிவித்தார்.

(அ-உ-2)

### சுபநேரம்

30—6—1986
திங்கட்கிழமை
சுபநேரம்:-
11 56 முதல் 1.26 வரை
ராகுகாலம்:-
7 26 முதல் 8.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி பின்னிரவு
12.37 வரை

வாகனங்கள்

## ஆனையிறவைத் தாண்ட பல கட்டுப்பாடுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் செல்லும் வாகனங்கள் ஆனையிறவு தடைமுகாமைத் தாண்டிச் செல்வதற்கு சிலகட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறதாம்

அந்த வாகனங்கள் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், நிதி நிறுவனங்களில் வாகனத்திற்கு எந்த விதமான கடன்களும் இல்லை என்பதை அத்தாட்சிப் படுத்தக் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்ல வேண்டும்.

தனியார் பஸ்களுக்கு வழி அனுமதிப் பத்திரமும் தடை முகாம்களில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்களை எடுத்துச் செல்லாத வாகனங்கள் ஆனையிறவு தடை முகாமில் தடுக்கப்படுகின்றன.

இத்தவேளை கொழும்பில் இருந்து வரும்பஸ்கள் லொறிகள் அனைத்தும் கண்டி வீதியூடாக வர வேண்டும் எனவும் —

அதற்கு அத்தாட்சியாக வழியில் உள்ள முகாம்களில் கடிதம் பெற்று வர வேண்டும் எனவும் கேட்கப்பட்டிருக்கிறதாம்.

(உ-10)

### தடுத்து வைக்கப்பட்ட 62 வாகனங்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த சில நாட்களாக ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் நேற்று விடுவிக்கப்பட்டன.

கடந்த மூன்று நாட்களாக ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் சொந்தக்காரர்கள் யாழ் - அரச அதிபரை சந்தித்து தமது பிரச்சினையைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஆனையிறவு முகாம் உயரதிகாரிகளுடன் அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டதன் பயனாக அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 62 வாகனங்களும் நேற்று விடுவிக்கப்பட்டன.

(உ-10)

திருகோணமலை

## விலகம்விகாரையில் 3 மணிநேர மோதல்

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலை தொகுதியில் விலகம் விகாரைப் பகுதியில் சிப்பாய்களுக்கும் போராளிகளுக்கும் இடையே நேற்று காலையில் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக பலத்த மோதல்கள் இடம் பெற்றன.

திருகோணமலை நகரில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் விலகம் விகாரைப் பகுதிக்கு பல கவசவாகனங்களில் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

பீரங்கிப் படகுகள் மூலம் கடற்படையினர் தலாவெளிக்கு அனுப்பப்பட்டனர்.

மோதல் நடந்த இடத்துக்குச் சென்ற ஹெலிக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### உலக கிண்ணம் ஆர்ஜென்ரீனா அணிக்கு

மெக்ஸிக்கோ, ஜூன் 30

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி சாம்பியனானது.

நேற்று நள்ளிரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மன் அணியை அது 3 - 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, மருந்து, எரிபொருள்

# தட்டுப்பாட்டை நீக்க புதிய முயற்சி

## மக்கள் நடவடிக்கைக்குழு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ் மாவட்டத்தில் உருவாகியுள்ள உணவு, மருந்து, எரிபொருள் தட்டுப்பாட்டினை உள்ளூர் உற்பத்தி, சிக்கனம், சுய தேவைப் பூர்த்தி ஆகியவை மூலம் மக்களும் ஈடு கொடுக்க வேண்டும்.

இதற்கு ஏற்றவகையில் திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயற்படுத்துவது குறித்து யாழ்ப்பாண மக்கள் நடவடிக்கைக் குழுவின் உபகுழு முயற்சி எடுத்துவருகிறது.

நாட்டில் இன்று எழுந்துள்ள சூழ்நிலை காரணமாக உணவு, மருந்து எரிபொருள், ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

போக்குவரத்துச் சீர்குலைவு, ஆனையிறவைத் தாண்டிச் செல்லும் லொறிகள் அனுமதி சீட்டுப்பெறும்முறை ஆகியவை காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமாகி உள்ளது.

இதனால் மக்கள் தமது உணவு முறையில் மாற்றஞ் செய்வது அவசியம்.

அதற்கு வரகு, குரக்கன், சாமை, சோளன் போன்ற உபபயிர்களை வளர்ப்பதுபற்றி ஆராய்வது அவசியம்.

மக்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் குறுகிய கால விவசாய உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

மருந்துத் தட்டுப்பாட்டினைத் தவிர்ப்பதற்கு உள்ளூர் மூலிகை வளர்ப்புத் திட்டங்களில் மக்கள் ஈடுபாடு காட்டுதல் வேண்டும். இவைபற்றி ஆராய்ந்து மக்களுக்கு விளக்கம் அளித்து ஊக்கம் வழங்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இவ்வாறு இவ்வுபகுழு கருத்து வெளியிட்டுள்ளது. இது சம்பந்தமாக குழு அரசாங்க அதிபரைக் கண்டு நிலைமையை ஆராய்ந்தது.

திரு காமினி நவரட்ண, சட்டத்தரணி ஜே. ஈ. ஆர். செல்லத்தம்பு, டாக்டர் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, சட்டத்தரணி ஈ. சிவரட்னம், திரு எஸ். ஆறுமுகம் திரு டி. கிறிஸ்தோபர், திரு எஸ் மாணிக்கம் திருமதி ஏ சுவாமிநாதன் ஆகியோர் இவ்வுபகுழுவில் அங்கம் வகிக்கின்றனர். (உ-9)

# கிளிநொச்சி அகதிகளுக்கு

## இலவச பங்கீட்டு உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

அகதி முகாம்களில் தங்கியுள்ள கிளிநொச்சி மக்களுக்கு 2 வாரகாலத்துக்கு இலவச பங்கீட்டு உணவுப் பொருள்களை வழங்கும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

தொலைபேசி மூலம் கிளிநொச்சி மக்களின் அவல நிலையை அரச அதிபர் திரு என். ஜெயநாதன் கொழும்பு அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னார்.

அதைத் தொடர்ந்து இரண்டு வாரகாலத்துக்கு இலவச உணவுப் பொருள்களை வழங்கும்படி அரச அதிபருக்குத் தொலைபேசி மூலம் உத்தரவு வழங்கப்பட்டது.

இன்றுமுதல் அகதிகளுக்கு இலவச பங்கீட்டுப் பொருள்களை வழங்கக்கூடியதாக பூர்வாங்க அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அகதிகளுக்கு வழங்குவதற்கான அரிசி, மா மற்றும் பொருள்கள் மகாமும்பில் இருந்து நேரே கிளிநொச்சிக்கு அனுப்பப்படும் என்று தெரிகிறது. (இ-எ-6)

## சமய அறிவுப்போட்டி வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ் மாவட்ட ரீதியில் புன்னாலைக் கட்டுவன் இந்து இளைஞர் மன்றம் சைவசமய அறிவுப் போட்டிகளை அண்மையில் நடாத்தியது.

போட்டிகளில் 527பேர் பங்குபற்றியிருந்தனர்.

விளைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். நவரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

பரிசு பெற்றவர்கள் விபரம் வருமாறு:—

விசேட பரிசில்கள்:

ஆரம்ப பிரிவு: தி. சுகன்யா (குப்பிளான் விக்னேஸ்வரா ம. வி)

கீழ்ப்பிரிவு: அ முருகதாஸ் ஏழாலை (று. க பாடசாலை)

மத்திய:- சி. சுஜாதா (உடுவில் [illegible] கணேச வித்தியாசாலை)

மேற்பிரிவு: தி சந்திரிகா சண்டுக்குளி மகளிர் கல்லூரி)

வகுப்பு ரீதியாக பின்வருவோர் பரிசுகளை பெற்றனர்

10 ஆம் வகுப்பு: த ஜெயகணேசன்.

9 ஆம் வகுப்பு: இ சந்திரிக்கா.

8 ஆம் வகுப்பு: செ. யோகேஸ்வரி.

7 ஆம் வகுப்பு: சி சுஜாதா

6ஆம் வகுப்பு: க. மீனலோஜனி.

5 ஆம் வகுப்பு: சு முருகதாஸ்.

4 ஆம் வகுப்பு சி. சிவாஜினி

3 ஆம் வகுப்பு தி. சுகன்யா. (ஒ)

## ஜூலை 5 ல் லலித் திரும்புவார்

கொழும்பு ஜூன் 29

அமெரிக்கா சென்ற அமைச்சர் அத்துலத் முதலி ஜூலை 5 இல் கொழும்பு திரும்புவார். (உ எ-8)

## புதுமையை புகுத்தும் நடன இயக்குநர் பாபு

இதுவரை நூற்றி இருபத்தைந்து படங்களுக்கு மேல் நடன இயக்குநராகப் பணி புரிந்திருப்பவர் பாபு.

இளைஞரான இவர் சலீம், புலியூர்சரோஜா ஆகியோரிடம் உதவியாளராகப் பணி புரிந்தவர்.

மற்றவர்களை விட இவர் நடனக் காட்சிகளைப் படமாக்குவதில் வேறுபடுகிறார்.

அதைப்பற்றி அவரே சொல்கிறார்.

நான் நடனம் அமைத்துக் கொடுக்கும் ஒவ்வொரு பாடலிலும் ஏதாவது ஒரு புதுமை செய்வேன்; செய்து கொண்டிருக்கிறேன்.

வெறும் நடன அசைவுகளை வைத்து ஒரு பாடலைப் பிரமாதப்படுத்திவிட முடியாது. பாடலிலும் விஷயம் இருக்க வேண்டும். படமாக்குவதிலும் விஷயம் இருக்க வேண்டும்.

இதுவரை நான் பணியாற்றிய படங்களில் எனக்குப் பெயர் தேடித்தந்தவை என மௌனகீதங்கள், அந்த ஏழு நாட்கள், சட்டம் ஒரு இருட்டறை உட்பட பல படங்களைச் சொல்லலாம்.

சட்டம் ஒரு இருட்டறையில் 'தனிமையிலே ஒருராகம்' என்ற பாடல் வித்தியாசமாக அமைந்திருந்ததாக அந்தப் பாடல் காட்சியில் நடித்த விஜயகாந்த் இன்றைக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

'நாகம்' படத்திற்காக அனுராதாவின் நடனக்காட்சி ஒன்றை எவ்வித முன் ஒத்திகையும் இன்றி காலை ஒன்பதிலிருந்து மாலை ஆறு மணி வரை 135 ஷாட்டுக்களில் படமாக்கி இருக்கிறோம்.

'ஜனவரி1' படத்திற்காக விஜயகாந்த், சுலக்ஷணா கலந்து கொண்ட பாடல் காட்சியை இரண்டு நாட்களில் எதுவித ஒத்திகையும் இன்றி எட்டே ஷாட்டில் படமாக்கினோம்.

கவுண்டமணி வெறும் நகைச்சுவை நடிகர் தானே என்கிறார்கள். ஆனால் அவரை 'பணம் பத்தும் செய்யும்', 'பிறந்தேன் வளர்ந்தேன்' ஆகிய படங்களில் நடனமாடச் செய்திருக்கிறேன் சில நடிகர்களை விட அவர் நன்றாகவே ஆடுகிறார் என்றார் பாபு.

## அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி

அமரர் க சண்முகம் நினைவாக ஆண்டு தோறும் கட்டுரைப் போட்டி நடத்தி மாணவர்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்டி, அவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பது எமது நோக்கம்.

இந்த வரிசையில் இடம்பெறும் முதலாவது போட்டி இது

பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டி, பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறும்

* ஆரம்ப பிரிவு :- 6ம், 7ம், 8ம் வகுப்புகள்
* இடைநிலைப்பிரிவு:- 9ம், 10ம் வகுப்புகள்
* உயர்தர பிரிவு: க. பொ. த. உயர்தர வகுப்பு

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்புகள் வருமாறு:-

ஆரம்ப பிரிவு :-
"அன்றாட வாழ்க்கையில் சமயம்"

இடை நிலைப்பிரிவு:-
"சமயமும் அறிவியலும்".

உயர்தர பிரிவு:-
"சமயம் காட்டும் அன்புநெறி"

ஆரம்ப பிரிவினர் புல்ஸ்காப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும், இடைநிலைப் பிரிவினர் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் உயர்தரப் பிரிவினர் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதும்படி வேண்டப்படுகின்றனர்.

ஒரு மாணவன் ஒரு கட்டுரை மட்டுமே போட்டிக்கு அனுப்பலாம். அதுவும் அவரது சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.

கட்டுரையைப் போட்டிக்கு அனுப்பும்போது பாடசாலை அதிபரின் உறுதியுரை இணைக்கப்படல் வேண்டும். கட்டுரையாளர் தமது பாடசாலை மாணவன் என்பதையும், கட்டுரை மாணவனது சொந்தப் படைப்பு என்பதையும் அதிபர் தமது உறுதியுரையில் தெளிவுபடுத்துவது முக்கியம்.

இப்போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், நிறுவனத்தின் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் இப்போட்டியில் பங்கு பெற முடியாது.

கட்டுரைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

போட்டி முடிவு நாள்:- 27 - 07 - 1986.

அனுப்பவேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி,
மே/பா சஞ்சீவி,
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்.

பரிசுகள்:

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படவுள்ள 3 பரிசுகளின் விவரங்கள் வருமாறு:-

முதற்பரிசு — ரூபா. 500/-
இரண்டாவது பரிசு — ரூபா. 200/-
மூன்றாவது பரிசு — ரூபா. 100/-

இவற்றுடன் முதற் பரிசு பெறும் மாணவன் பயிலும் பாடசாலைக்கும் தனியான பரிசு உண்டு.

போட்டி முடிவுகள் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

## விறகுக்கட்டுடன் வரும் மீனவர்கள்

ஊர்காவற்றுறை, ஜூன் 30

அரசாங்கத்தின் தடைச் சட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் தங்கள் குடும்பங்களை பராமரிக்க மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதனால் சுருவில் பகுதி மீனவர்கள் புதிய தொழிலொன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

சுருவில் கிராமத்தின் கடற்கரையிலிருந்து, கடலில் மிகக் குறுகிய தூரத்திலிருக்கும் சிறு, சிறு தீவுகளில் காணப்படும் 'கண்ணா' எனப்படும் விறகிற்கு இப்பகுதியில் மிகுந்த கிராக்கியுண்டு.

பல நேரங்களில் தங்கள் வள்ளங்களில் கூட்டமாகச் செல்லும் மீனவர்கள் மாலை விறகுக் கட்டுக்களோடு திரும்பி வருகின்றார்கள்.

மீன் விற்பனையைப் போன்று கரையிலேயே அவ்விறகுக் கட்டுக்களை விற்றுத் தீர்ந்து விடுவதாக மீனவர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ - 16)

# மாநிலம் மாவட்டம் உள்ளூர்

# மண்டைதீவு வழமை நிலைக்குத் திரும்புகிறது

மண்டைதீவு, ஜூன் 30

மண்டைதீவு கிராமம் மீண்டும் வழமைக்கு திரும்புகின்றது.

மண்டைதீவு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வெளியிடங்களில் தஞ்சமடைந்த குடும்பங்கள் படிப்படியாக வந்து கொண்டிருக்கின்றன.

பல நாட்களுக்கு பிறகு இப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தை காணக் கூடியதாக இருக்கின்றது.

அகதிகளாக தஞ்சமடைந்த 650 குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்குரிய உணவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகக் காணப்பட்ட போதும் 650 குடும்பங்களுக்கு மட்டும் அகதி நிவாரணமாக உணவுப் பொருள்கள் கிடைப்பது குறித்து ஏனைய அகதிகள் அதிருப்தி தெரிவிக்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட அகதிகளைத் தெரிவு செய்வதில் பாகுபாடு காட்டப்பட்டிருப்பதாக இப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்.

ஏனைய அகதிக் குடும்பங்களுக்கும் உடன் நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபரை இப்பகுதி பொதுஸ்தாபனங்கள் கோரியுள்ளன.

இது தொடர்பான கடிதம் ஒன்றை மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வேலணை உதவி அரசாங்க அதிபர் மைதிலி சோமசுந்தரத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. (இ-88)

## அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 30

மறைந்த அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் கா விசுவலிங்கம் ஐயாவுக்கு அஞ்சலி தெரிவிக்கும் தீர்மானம், இளைஞர் சமூக சேவைக் கழகத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அண்மையில் கழகத்தின் கூட்டம் பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (இ)

## சிங்கராயர் வழக்கு:

# அப்பீல்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜூலை 31 இல்

கொழும்பு, ஜூன் 30

வண பிதா ஆபரணம் சிங்கராயரை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அனுமதி கோரும் அரசு தரப்பு மனு மீதான தீர்ப்பு ஜூலை 31 இல் வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

வண. சிங்கராயரின் சார்பாக சட்டத்தரணி இ. ஆர் எஸ் ஆர் குமாரசாமி. வாதாடினார்

நீர்வேலிக் கொள்ளை வழக்கில் பிரபாகரன் மீது குற்றஞ் சுமத்தப்படவில்லை ஆகவே பிரபாகரன் குற்றமற்றவர் என்பது தெரிந்து இருந்தும் அது சம்பந்தமாக தகவல்களை தெரிவிக்கவில்லை என்று எப்படி வண சிங்கராயர் மீது குற்றஞ் சாட்ட முடியும்?

வண. சிங்கராயர் வைத்திருந்த பணம் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டது என்றால், ஏன் திருட்டுப் போன பணத்தை வைத்திருந்ததாக வண. சிங்கராயர் மீது அரசு வழக்குத் தாக்கல் செய்யவில்லை.

மேல் நீதிமன்றம் வண. சிங்கராயரை விடுதலை செய்து வழங்கிய தீர்ப்புச் சரியானதே.

அதை எதிர்த்து அரசு அப்பீல் செய்ய முடியாது — இப்படி [illegible] எஸ் ஆர் குமாரசாமி சொன்னார். (இ-எ)

# குழந்தைகளை தூய வாழ்வுக்கு அழைத்து

## செல்வது பெற்றோர் கடமை

யாழ்ப்பாணம் ஜூன் 30

குழந்தைகளை தூய வாழ்விற்கு அழைத்துச் செல்ல வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

இவ்வாறு டாக்டர் எமில் அத்தனுசியார் சொன்னார்.

புதிதாக திருநிலைப் படுத்தப்பட்ட அருள் திரு ரூபன் மரியாம் பிள்ளை அடிகள் தனது கிராமமான சில்லாலை பரிசுத்த கதிரை மாதா ஆலயத்தில் முதல் திவ்ய பலிப்பூசையை நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து சில்லாலை வாசிகளினால் நடத்தப்பட்ட உபசரணையின் போது மேலும் பேசுகையில் டாக்டர் எமில் அத்தனுசியார் "குழந்தைகளை ஆரம்பத்தில் இருந்தே பண்பு நிறைந்த வாழ்க்கைக்குப் பயன் படுத்த வேண்டும்" என்றும் சொன்னார்.

சில்லாலை பங்குத் தந்தை அருள் திரு இருதயதாஸ் அடிகள் தலைமை வகித்தார்.

பலிப்பூசையிலும் உபசரணையிலும் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களும் கன்னியாஸ்திரிகளும் கலந்து கொண்டனர்.

அருள் திரு ம.இ பயஸ் அடிகள் உரை நிகழ்த்திய பின்னர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி நன்றி சொன்னார். (இ-எ)

## மக்கள் கட்சி வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 30

சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஒரு பொது அமைப்பை உருவாக்கி ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக போராட முன்வர வேண்டும்.

இலங்கை மக்கள் கட்சிக்கு மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

மக்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர். (உ-எ 2)


## பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மனி
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொண்ட் (Bond)

டிக்கட் ஆகியனவும்

செய்து கொடுக்கப்படும்.

டென்மார்க் — கனடா

ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அபிவிருத்தி

(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)

மானிப்பாய்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## உதயன் - சஞ்சீவி

### சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் (ரூ ச) | சஞ்சீவி (ரூ ச) | உதயனும் சஞ்சீவியும் (ரூ ச) |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 313.00 | 104.00 | 417.00 |
| 06 மாதம் | 156.50 | 52.00 | 208.50 |
| 03 மாதம் | 78.50 | 26.00 | 104.50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரூ ச | ரூ ச | ரூ ச |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469.50 | 156.00 | 625.50 |
| 06 மாதம் | 234.75 | 78.00 | 312.75 |
| 03 மாதம் | 117.50 | 39.00 | 156.50 |

சந்தா விவரங்கள் மாற்றத்திற்குரியவை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்து நிற்கும் இறைவனிடம் வேண்டிக் கொள். அவன் தனது கருணையை உன்மீது பொழிவான்
—அன்னை சாரதா தேவி


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், 30-06-86
தொலைபேசி 24805 2207
த. பெ 23


# திருமலைத் துறைமுகம்: புறநீங்கல் ஏன்?

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மாகாண சபைத் திட்டத்தை முன்வைத்திருக்கிறது. கடந்த புதன்கிழமை ஆரம்பமான அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட 30 பக்க அறிக்கையில், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட இருக்கும் உத்தேச அதிகாரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

அந்த அதிகாரங்கள் என்ன என்பதை தமிழ் வாசகர்கள் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதனால் உத்தேச அதிகாரங்கள் பற்றிய விவரங்களை உதயனில் தொடர்ந்து பிரசுரிக்க ஏற்பாடாகி உள்ளது.

நாட்டில் ஒன்பது மாகாண சபைகளை நிறுவ உத்தேச திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது உள்ள மாகாணங்களே உத்தேச மாகாண சபைகளின் எல்லைகளாக இருக்கும்.

ஆனால் திருகோணமலைத் துறைமுகமும் அதனைச் சூழ உள்ள இடங்களும் மட்டும் மாகாண சபை நிர்வாகத்திற்குள் வரமாட்டா.

திருகோணமலை மாவட்டம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தது. முறைப்படி, நியாயப்படி, நீதிப்படி, திருகோணமலைத் துறைமுகமும், அதனை அண்டியுள்ள நகரப்பகுதியும் கிழக்கு மாகாண சபையின் கீழ் தான் வரவேண்டும்.

அப்போது தான் துறைமுகத்தையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் நிர்வகிப்பதிலும், அபிவிருத்தி செய்வதிலும் மக்கள் பங்கு இருக்க முடியும்.

ஆனால் உத்தேச திட்டத்தில், திருகோணமலை துறைமுகம், அதனைச் சூழ உள்ள இடங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்திற்கும், அபிவிருத்திக்கும் பொறுப்பாக அதிகார சபை ஒன்று நிறுவப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்படிச் செய்தால், மாகாண மட்டத்தில் அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசியல் முறை திருகோணமலையில் பொய்த்துவிடாதா?

அந்தந்தப் பகுதியை அதேபகுதி மக்கள் நிர்வகிக்கும் சித்தாந்தத்துக்கு முரணாகாதா?

திருகோணமலை மக்கள் தமது பகுதியை நிர்வகிப்பதற்குப் பதிலாக அதிகார சபை என்ற பேரில் எங்கிருந்தோ வரும் அதிகாரிகள் துறைமுகப் பகுதியை நிர்வகிப்பது எந்த வகையில் ஏற்கக்கூடியது?

இலங்கையின் தலைநகரான கொழும்பில் பெரிய துறைமுகம் இருக்கிறது. அது மேல் மாகாண, மாகாண சபை நிர்வாகத்தில் வர முடியுமானால் —

காலித்துறைமுகம் தென்மாகாணசபையின் நிர்வாகத்தில் இருக்கமுடியுமானால் —

திருகோணமலைத் துறைமுகத்திற்கு மட்டும் விதிவிலக்கு, புறநீங்கல் ஏன்? தெற்கிற்கு ஒரு நீதி; கிழக்கிற்கு ஒரு நீதியா? இதனை ஓரவஞ்சனை என்று சொல்லாமல் வேறு எப்படி வர்ணிப்பது?

புதிய யோசனைகளை அரசியல் கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பித்தபோது நாட்டின் ஜனாதிபதி பின்வருமாறு கூறியிருந்தார்:

இலங்கை பல இனமக்கள், பல மத மக்கள் வாழும் நாடு. இதுவரை காலமும் ஒரு குழுவினர் மீது மற்றக் குழுவினர் கொண்டிருந்த சந்தேகம் இனி நீங்கட்டும். அதன் மூலம் எல்லாத்தரப்பாருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கட்டிக் காப்போமாக.

ஆனால் திருகோணமலைத் துறைமுகத்தை மட்டும் தனித்து ஓர் அதிகாரசபை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நடைமுறை, ஆட்சியில் உள்ளவர்கள் மீது, திருகோணமலை மக்களுக்கு நிச்சயம் சந்தேகத்தை உருவாக்கும். அதாவது தமிழ் மக்களுக்கு சிங்கள மக்கள் மீது சந்தேகத்தை உருவாக்கும்.

திருகோணமலை அதிகாரசபை மூலம் தமிழர்கள் அப்பகுதியில் குறைந்த எண்ணிக்கையினர் ஆக்கப்படலாம். அதாவது துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதாகக் கூறி, தமது கருத்தையும் கேட்காமல் வெளியார் கொண்டுவந்து குவிக்கப்படலாம். தமது சொந்த இடத்தை மற்றவர்கள் ஆக்கிரமிக்கலாம் என்று தமிழர்கள் சந்தேகப்பட இடமுண்டு.

வல்லரசுகளுக்கு அக்கறையுள்ள துறைமுகத்தைத் தமிழர் நிர்வாகத்தில் விடக்கூடாது என்று அரசாங்கம் சதி செய்திருக்கிறதோ என்ற சந்தேகமும் அவர்கள் மனதில் நிச்சயம் எழும்.

இது அதிஉத்தம ஜனாதிபதிக்கும், மாகாண சபை திட்டத்தைத் தயாரித்தவர்களுக்கும் தெரியாமற் போயிற்றோ?

அல்லது தெரிந்துகொண்டுதான் வல்லரசுகளின் கண்விழக்கூடிய திருமலைத்துறைமுகத்தை அப்பகுதி மக்களிமிருந்து தட்டிப் பறிக்க வகைசெய்யப்பட்டதோ?

ஒரு சாரரின் சொத்தை இன்னொரு சாரார் தட்டிப்பறிப்பது தர்மம் அல்லவே; தாமிஷ்டம் அல்லவே; அது அதர்மம் ஆகும்.

## கல்வி கண்காட்சி

கரவெட்டி, ஜூன் 30
திரு இருதய கல்லூரியின் கல்வி அபிவிருத்தி கண்காட்சி இன்று30ஆம் திகதி காலை 9 00 மணி முதல் மாலை 4 00 மணி வரை மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

கரவை பங்குத் தந்தை கல்லூரி கொடியை ஏற்றிவைக்க திரு சிவராசா கண்காட்சியை திறந்து வைப்பார்.
(இ-70)

## கைது

கொழும்பு, ஜூன் 30
கந்தளாய் பட்டினத்தில் வைத்து ஆயுதப் படையினர் இரண்டு கிறனேட்டுகளுடன் ஒரு சிங்கள இளைஞனைக் கைது செய்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் இந்த இளைஞனுக்கு தொடர்பிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரம் சந்தேகம் தெரிவித்து உள்ளது.

இளைஞனின் பெயர் சரத் குலரத்தின. (இ எ-)

## வெளி உலகில்

### பஞ்சாப் அனைத்து கட்சிகள் கூட்டம்

சண்டிக்கார், ஜூன் 29
பஞ்சாப்பில் வெள்ளிமலை கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டம் மாநிலத்தில், பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றுக்கு எதிராக ஒருங்கிணைந்த இயக்கமொன்றை மேற்கொள்ளுமாறு மாநில மக்களை வற்புறுத்தியது.

வேலை நிறுத்தங்கள் போன்றவற்றில் ஈடுபடாமல் பாரம்பரிய பிணைப்புகளை வலுப்படுத்துமாறு மாநில மக்களையும் மதசார்பற்ற சக்திகளையும் அது கேட்டுள்ளது.

அகில இந்தக் காங்கிரஸ், (ஐ) ஜனதாக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மார்க்சிஸ கம்யூனிஸ்ட்கட்சி, ஆகியவற்றின் மூத்த தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
(இ-ஒ)

### றேகனின் செயலுக்கு நீதிமன்றம் கண்டனம்

மொனகுவா, ஜூன் 29
நிக்கராகுவா அரசுக்கு எதிராக அமெரிக்கா 1 கோடி டாலர் பெறுமதியான ராணுவ உதவிகளை அளிக்க முன்வந்துள்ளது சர்வதேச அமைதியைச் சீர்குலைக்கும் செயலாகும்.

இவ்வாறு சர்வதேச நீதிமன்றம் தெரிவித்தது.

உடனடியாக ஐ நா. பாதுகாப்புச்சபை கூட்டப்பட்டு வன்முறைச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் அமெரிக்காவின் செயலைக் கண்டிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் கோரி உள்ளது.
(இ-ஒ)

### மருமகள் விதித்த தண்டனை!

பீகிங், ஜூன் 29
வயோதிப மாமனாரை பராமரிப்பது பெரும் சுமை எனக் கருதிய சீனப் பெண்ணொருத்தி உயிருடன் அவரை பிரேதப் பெட்டியில் வைத்து புதைகுழியில் புதைத்தாள்.

புலந்த ஓசையும் அழுகுரலும் புதைகுழியிலிருந்து எழுவதை அவதானித்த அயலவர்கள் அந்த வயோதிபரை உயிருடன் மீட்டனர்.

அந்த பெண்மணிக்கும் அவளின் கணவனுக்கும் தண்டனை அளிக்கப்பட்டது.
(உ-ஒ)

# பஞ்சாப்: தீவிரவாதிகளுக்கு

## அமெரிக்கா ஆயுத உதவி

### ரஷ்ய பத்திரிகை குற்றச்சாட்டு

மாஸ்கோ ஜூன் 29
அதிக அளவிலான போர் ஆயுதங்களை பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஊடாக அமெரிக்கா வழங்குகின்றது.

இவ்வாறு ரஷ்யாவிலிருந்து வெளியாகும் பிரபல சஞ்சிகையொன்று குற்றம் சாட்டியுள்ளது.

பாகிஸ்தானும் மேற்கு நாடுகளில் சிலவும் இந்தியாவின் ஒருமைப்பாட்டை முறிப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றன.

பஞ்சாப் பிரச்சினை மூலம் இந்தியா பிளவுபடுவதையே பாகிஸ்தான் விரும்புவதாக அதனை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது.

இந்தியாவிற்கு எதிரான தீயசக்திகளுக்கும், பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அச்சஞ்சிகை மேலும் தெரிவித்தது.
(உ-ஒ)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஹேய்க் விருப்பம்

வாஷிங்டன், ஜூன் 29
அமெரிக்காவில் 1988 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல்களில், ஆளும் குடியரசுக் கட்சி சார்பாக தான் போட்டியிடப்போவதாக முன்னாள் அமெரிக்க உள்நாட்டு அமைச்சர் அலெக்ஸாண்டர் ஹேய்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்க நாட்டுச் சட்டங்களின்படி ஒருவர் மூன்றுவது தலைவராகவும் ஜனாதிபதி தேர்தல்களில் கலந்துகொள்ள முடியாது.

அதனால் றேகன் போட்டியிட மாட்டார். அவர் ஏற்கனவே இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது தெரிந்ததே.
(உ-ஒ)

## அறுபடை வீடுகளும் ஒரே இடத்தில்

சென்னை, ஜூன் 29
காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் அறிவுரைப்படி சென்னை திருவான்மியூர் அருகில் அறுபடைவீடுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் அதே வடிவமைப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வாழும் தமிழர்களது உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு இந்திய நாணயத்தில் இரண்டரைக்கோடி ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தை நிறைவேற்றச் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.
(உ-ஒ)

## நாடு கடத்துப உத்தரவு

லிஸ்பன் ஜூன் 29
போர்த்துக்கல் நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்தார்கள் எனக் குற்றம் சாட்டி இரு ரஷ்ய தூதரக அதிகாரிகள் இருவருக்கு போர்த்துக்கல் அரசு நாடுகடத்தும் உத்தரவு விடுத்திருக்கிறது.
(உ-ஒ)

# இந்தியாவில் தீவிரவாதிகள் செயற்படுவதைத் தடுங்கள்!

## இது ஒன்றே நான் கேட்பது - ஜனாதிபதி

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூந்த வியழன் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தியிருந்தார்.

அந்த மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களின் இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

கேள்வி: மாகாண சபைகள் வேண்டாம் என்று சில மாகாணங்கள் கூறினால் அங்கு இச் சபைகள் நிறுவப்படமாட்டாதா?

ஜே ஆர்: இல்லை. எல்லா மாகாணங்களிலும் மாகாண சபைகள் இருக்கும். அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தயோசனைகள் சமர்ப்பிக்கப்படும்.

குழுக்கூட்டத்தில் சுதந்திரமாக வாக்களிக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். அரச எம் பிக்கள் என்னிடம் தந்துள்ள இராஜினாமாக் கடிதங்களை திருப்பி அவர்களிடமே கொடுக்கப்போகின்றேன்.

அவர்கள் நிச்சயம் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு அரச நாடாளுமன்றக் குழுவில் முட்டாள்கள் இல்லை.

நாடாளுமன்றத்தில் இந்த யோசனைகள் அடங்கிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் கருத்து வேறுபாடின்றி எனது கட்சி எம் பி.க்கள் ஆதரிக்கவேண்டும். அங்கு சுதந்திர வாக்களிப்புக்கு இடமில்லை.

கேள்வி: மாகாண பொலீஸ்படை அமையும் விதம்பற்றிக் கூறுவீர்களா?

ஜே ஆர்: மாகாணப் பொலீஸ்படை இனரீதியில் இருக்காது; மொழிரீதியில்தான் அமையும்.

தமிழில் தகுதிபெற்ற சிங்களவரான பொலீஸ் அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் பணி புரியலாம். சிங்களத்தில் தகைமைபெற்ற தமிழ்ப் பொலீஸ் அதிகாரி மாத்தறையில் பணிபுரியலாம்.

கேள்வி: யுத்த நிறுத்தம் ஏற்படுமா?

ஜே.ஆர்: அது பற்றி நாம் இன்னும் நினைக்கவில்லை அரசியல் கட்சி மாநாட்டில் கொண்டு வரப்பட்டால் அப்பேது அதைப்பற்றி கவனத்துக்கு எடுப்போம்.

கேள்வி: மாகாண சபைச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக அரசமைப்புச்சட்டத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திருத்த நீங்கள் முடிவு செய்துள்ளீர்கள் எதிர் கால அரசாங்கம் இதை மாற்றக் கூடாது என்ற எண்ணத்தினால்தான் இப்படி முடிவு செய்திருக்கிறீர்கள்?

ஜே ஆர்: ஆம் அதுவும் ஒரு காரணம் இன்னொரு விஷயமும் உண்டு. மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையுடன் தான் அரசமைப்புச்சட்டத்தில் திருத்தம் செய்யலாம்.

கேள்வி: மாகாண சபைத் திட்டம் சிங்களவருக்கு தீமை தராதா?

ஜே ஆர்: சிங்களவர்கள் பயப்படுவதற்கு இத்திட்டத்திலே எதுவும் இல்லை. தமிழர்கள் பயப்பட நிறைய உள்ளன.

தமிழர்களின் பயத்தைப் போக்கத்தான் நான் முயற்சிக்கின்றேன்.

கேள்வி: பொலீஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்குவது பற்றி விவரிப்பீர்களா?

ஜே ஆர்: யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது சில பொலீஸார் நூலகம், கடைகள் முதலியவற்றை எரித்தார்கள். அந்தப் பொலீஸாரை கட்டாயம் தண்டிக்க வேண்டும்.

அச்செயல்களினால் தான் தமிழர்கள் தங்களுக்கு என்று சொந்தப் பாதுகாப்பு ஒன்றுதேவை எனக் கோரும் அளவுக்குச் சென்றுள்ளனர்.

கேள்வி: பஞ்சாப் உடன்படிக்கை வந்த பின்னரும் அங்கு தீவிரவாதிகள் சண்டை இடுகின்றார்கள். அப்படி இங்கும் ஏற்பட்டால் நீங்கள் உங்கள் திட்டத்தை நிறைவேற்றுவீர்களா? அல்லது சண்டையை முடித்துக்கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவீர்களா?

ஜே ஆர்: திட்டத்தை அமுல் செய்வது ஒருபக்கம். தீவிரவாதிகளுடன் மோதுவது மற்றப்பக்கம். எங்கு, எப்போது, என்ன மாதிரி மோத வேண்டிய தேவை ஏற்படுகின்றதோ அங்கு அப்போது அதற்கேற்ப தீவிரவாதிகளுக்கு எதிராக மோதல் இடம்பெறும்.

கேள்வி: மாகாண சபை யோசனைகள் குறித்து மக்களின் அபிப்பிராயங்களை எப்படி அரசாங்கம் பெற எண்ணியுள்ளது?

ஜே ஆர்: மக்கள் தங்கள் அப்பிராயங்களை விவாதங்கள், கருத்தரங்குகள் மூலம் எமக்குத் தெரிவிக்கலாம்; ஆனால் வீதிப் போராட்டங்கள் மூலம் தெரிவிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

கேள்வி: பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான யோசனைகள் என்று இந்தியா கூறியுள்ளதே

ஜே ஆர்: இந்தியாவை இது விஷயத்தில் உதவும்படி நான் கேட்கவில்லை. நான் இந்தியாவைக் கேட்பது என்ன என்றால் இலங்கையைப் பாதிக்கக் கூடியமுறையில் இந்திய மண்ணில் தீவிரவாதிகள் செயல்படுவதைத் தடுங்கள் என்பது ஒன்றே.
(ஈ-எ)

# மாகாண சபைகளுக்குரிய உத்தேச அதிகாரங்கள்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாரித்த புதிய யோசனைகள் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த யோசனைகளின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்ந்து உதயனில் பிரசுரமாகும்.

இன்று முதற்பகுதி வெளியிடப்படுகிறது.

இலங்கை அரசின் புதிய யோசனைகளின் கீழ் மாகாணசபைகள் பின்வரும் துறைகளில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெறும்:

1 உள்நாட்டுப் பாதுகாப்பு, ஒழுங்கு
2 மாகாணத்தினுள் வரும் காணிக் குடியேற்றம்.
3 விவசாயம், கைத்தொழில்
4. கல்வி கலாசாரம்.

### விவசாயம்

1. தேசியக்கொள்கை: நாடு முழுவதற்குமான தேசிய விவசாய அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பது, செயற்படுத்துவது முற்றும் மத்திய அரசிடமே இருக்கும்.

உற்பத்திப் பொருள்களின் அடிமட்ட விலைகளை நிர்ணயம் செய்வது, மானியம் வழங்குவது, காப்புறுதித் திட்டம், மாவட்ட, மாகாண ஒருங்கிணைப்பு, தேசிய உற்பத்தி இலக்குகளை அடைவது, திணைக்களத்துக்குச் சொந்தமான பண்ணைகள், ஆராய்ச்சி நிலையங்கள், பயிர் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், ஏற்றுமதி - இறக்குமதி முதலிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கும்.

2. பொதுவாக மாகாணசபைகளுக்குள்ள அதிகாரங்கள்:

(அ) மாவட்ட, மாகாணங்களுக்கு இடையே உள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு இருக்கக்கூடிய விதத்தில் மாவட்ட விவசாயத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல், செயற்படுத்தல், உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தலும், விநியோக, சேவை நிலையங்களை நிர்வகிப்பதும்.

(ஆ) ஊட்டச் சத்து உட்பட ஏனைய விஸ்தரிப்பு நடவடிக்கைகள்.

(இ) கமநல சேவைச் சட்டத்தின்கீழ் வரும் பெரும்பாலான அதிகாரங்கள் குறிப்பாக கமத்தொழில் சேவை நிலையங்களை மேற்பார்வை இடுதல், விவசாய அடையாள அட்டை வழங்குதல், விவசாயச் செய்கை இடாப்பு தயாரித்தல் ஆகியன.

(ஈ) சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல் பராமரித்தல்.

(உ) சிறு பயிர்ச்செய்கைகளை விஸ்தரித்தல், தனியார் நாற்றுப்பண்ணைகளை ஒழுங்குபடுத்தல், விவசாய தொடர்பான கைத்தொழில்களை நிறுவுதல்.

### கைத்தொழில்

1 கைத்தொழில் அபிவிருத்தி துறை சம்பந்தமான தேசியக்கொள்கை தயாரிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கும்.

2 இந்தத்திட்டத்தின் கீழ், மாகாணசபைகள் தங்கள் எல்லைக்குள் கைத்தொழில்களை நிறுவவும் செயற்படுத்தவும் அதிகாரம் பெறும்.

3 திட்டமிட்ட அபிவிருத்தி, தேசிய வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் முதலியன நாடுமுழுவதும் சமமாக இருக்கவேண்டும் என்ற அக்கறை காரணமாக கைத்தொழில்களைப் பதிவு செய்வது தொழில் சம்பந்தமான விவரங்கள் சமர்ப்பிப்பது, சம்பள விலை நிர்ணயிப்புக் கொள்கை, சுற்றுப்புற சூழல், தரநிர்ணயம் முதலிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கும்.

கடன் முதலீட்டில் ஆரம்பிக்கப்படும் புதிய கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அமைச்சின் அங்கீகாரம் பெறும் போதைய நடைமுறை தொடர்ந்து இருக்கும்.

4 தற்போது அரசாங்கம் நிர்வகித்து வரும் கைத்தொழில்கள் மாகாண சபைகளுக்கு மாற்றுபடும் விஷயம் பற்றி யோசிக்கப்படவில்லை.

### கல்வி

1. கல்வி, கலாசார விஷயங்கள்:

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கலின்கீழ் கல்வி, கலாசார விஷயங்கள் சம்பந்தமான குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் செக்கண்டரி மட்டம் (Secondary Level) வரை மாகாண சபைக்கு வழங்கப்படும்.

அரசநிதி உதவி இன்றி தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவவும் நிர்வகிக்கவும் மாகாண சபைகளுக்கு அதிகாரம் இருக்கும்.

கல்வித்துறை சம்பந்தமான அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை பற்றி பின்னர் பரிசீலனை செய்யப்படும்.

### தேசிய கல்விக் கொள்கை

இது பாரபட்சமற்றதாக அமையும்

### கலாசாரம்

கலாசார நடவடிக்கைகளை நடத்துவது, அபிவிருத்தி செய்வது சம்பந்தமான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

இவற்றிற்கு நிதி உதவி அளித்தால் மட்டுமே மத்தி அரசு மேற்பார்வை செய்யும். கலாசார நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது சம்பந்தமான விஷயங்களில் பிரதேச சபைகளுக்கு மாகாண சபை உதவிசெய்யும்.

கலை, நாடகம், சங்...
(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்மொழி



குறள்:
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

பொருள்:
கேட்டவர் பலரும் வெறுக்கும் படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுவான், எல்லோராலும் இகழப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர
சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி.


# உதயன்

30 06 — 1986 திங்கட்கிழமை


யாழ். நகரிலே ஆறு ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிகுளோப் ரெலிபோன்: 25088
ஆறு சமாந்தர லைன்கள் கொண்டது

# அரச, தனியார் ஊழியருக்கு ஆயுதப்பயிற்சி

## சம்பளத்துடன் விடுமுறை

கொழும்பு, ஜூன் 30

அரச, கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்களுக்கும் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்படுவது போன்ற ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விரும்பி விண்ணப்பிக்கும் ஊழியருக்கே இவ்வாறு ஆயுதப் பயிற்சி வழங்கப்படும்

பயிற்சிக் காலத்தில் சம்பளத்துடனான விடுமுறை அவர்களுக்கு வழங்கப்படும்

அரசு ஏற்கனவே ஊர்காவல் படைக்கு ஆட்களைத் திரட்டி பயிற்சி கொடுத்து ஆயுதங்களுடன் கடமையில் ஈடுபடுத்தி உள்ளது

ரயில்வே பாதுகாப்பு ஊழியருக்கும் இராணுவப் பயிற்சி வழங்குகின்றது.

இப்போது அரச, கூட்டுத்தாபன, தனியார் ஊழியருக்கும் ஊர்காவல்—ஆயுதப் பயிற்சி அளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

(அ-எ)

## மண் அள்ளியவர் வேட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 30

பட்டிருப்புப் பாலம் அருகில் சிப்பாய்கள் நேற்று மாலை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மண் அள்ளிக் கொண்டு நின்ற ஒரு தமிழர் உயிரிழந்தார்.

அப்பகுதியில் இராணுவத்தினர் ரோந்து வருவதைக் கண்டதும் அங்கு நின்ற இரண்டு பேர் ஓடினர். இதைக் கண்டதும் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அச்சமயம் பாலம் அருகில் மண் அள்ளிக் கொண்டு நின்ற தமிழர் ஒருவர் மரணமானார்.

மரணமானவரின் சடலத்துடன் சிப்பாய்கள் சித்தாண்டி முகாமுக்குத் திரும்பினர்.

(உ-எ-21)

## மரணவிசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 30

நேற்று முன்தினம் நாவற்குழியில் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்திய தாக்குதலின்போது மரணமான தன்னாலையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி தவராசாவின் மரண விசாரணை நேற்று நடைபெற்றது.

மரண விசாரணையை யாழ் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(உ-10)

## அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

அமரர் கா. விசுவலிங்கம் அஞ்சலிக் கூட்டம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும்.

நினைவு மலர் ஒன்றும் நாளைய தினம் வெளியிடப்படும்.

துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் தலைமை வகிப்பார். மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் மலர் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மற்றும் பலர் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

ஆறுமுகநாவலர் சபை இந்த அஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது (உ-எ)

## நூல் வெளியீடு

காங்கேசன்துறை, ஜூன் 30

தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நாளை முதலாம் திகதி "அரியவும் பெரியவும்" என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெறவிருக்கிறது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கலாநிதி ஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் வெளியீட்டுரை வழங்குவார்-ஓய்வுபெற்ற உப - அதிபர் திரு அ. விஸ்வநாதனின் பாராட்டுரையும், நூலாசிரியர் பண்டிதர் மு திருநாவுக்கரசுவின் பதிலுரையும் இடம்பெறும்.

(உ-68)

## மாகாண சபை..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

கீதம், நடனம், இலக்கியம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு செயல்படும் அதிகாரமும் கொண்டாட்டங்களை நடத்தும் அதிகாரமும் மாகாண சபைக்கு வழங்கப்படும்.

(தொடரும்)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் புதன்கிழமை (2 7 86) கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

12 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் (உ-எ)

## சமாதான சபை பற்றி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தென்மராட்சிப் பகுதியில் கடந்த பல மாதங்களாகச் சமாதான சபைகள் இயங்கவில்லை.

இந்த நிலையை நீக்கும் பொருட்டு பிரஸ்தாப சபைகளை புனரமைத்து அவற்றை இயங்கச் செய்வது குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தேர்தல் மூலம் சமாதான சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வது குறித்தும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது (உ)

## அன்னையின்..

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

செல்லும்போது 'நானும் வருகின்றேன்' — என்று தானும் சென்றாராம் திருமதி சபாரத்தினம்.

'அன்னை' என்பவள் இவள் தானோ?

(எ-1 50)

## இன்று நடப்பவை

### பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 30

வேலணை வட்டாரப் பண்ணிசைப் போட்டி இன்று திங்கட்கிழமை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை வட்டார அதிபர் சங்கச் செயலாளர் கவனித்து வருகிறார்

(உ-10)

### கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 30

நல்லூர் செண் பெனடிக் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் கல்விக் கண்காட்சி இன்று (திங்கட்கிழமை) அதிபர் அருட்சகோதரி ஊசா தலைமையில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சியை நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி ஆரம்பித்து வைப்பார்.

(உ-10)

* * *

காங்கேசன்துறை ஜூன் 30

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம், தந்தை செல்வா ஆரம்ப நிலைப்பள்ளி ஆகியவை இணைந்த கல்விப் பொருட்காட்சி இன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது

யாழ் கல்வி அதிகாரி திரு. இ. க குலசேகரம் கண்காட்சியைத் திறந்துவைப்பார் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(உ-68)

* * *

கரவெட்டி, ஜூன் 30

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் கல்வி அபிவிருத்திக் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு க. சிவபாதசுந்தரம் தலைமையில் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. சந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார். (இ-70)

## யாழ்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தது

சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களமும் இலங்கை விமானப் படையும் இத்தகவலை ஊர்ஜிதம் செய்ததாக அதில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-2)

# ஆடிக்கலவர நினைவு நாளன்று காத்திரமான எதிர்ப்பைக் காட்டவேண்டும்

## கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஆடிக் கலவர நினைவு தினம் வெறுமனே அனுதாப நடவடிக்கைக்கான நாளாக, துக்க தினமாக அமையக் கூடாது

மருக இனக் கலவரத்தைக் காத்திரமாக கண்டிக்கும் எதிர்ப்புத் தினமாக அது அமைதல் வேண்டும். யாழ் குடாநாடு மட்டுமன்றி வெளியே முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிழக்கு மாவட்டங்களிலும் அதன் வெளிப்பாடு தெரியவேண்டும்.

நல்லூர் இந்து விடுதியில் திரு. எஸ் தவராசா தலைமையில் ஜூலை 25 ஆம் திகதியை இனப்படுகொலை எதிர்ப்புத் தினமாக ஒழுங்கு செய்வது பற்றி ஆராயப்பட்டபோது சியல் தொழிலாளர் ஒன்றியத்தைச் சார்ந்த திரு. எஸ் பார்த்திபன் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆடிக் கலவரத்தின் போது சிறையில் இருந்தவர்கள் அடுத்தடுத்துக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஆணைக்குழு விசாரணை ஒன்றை நடத்த ஜனாதிபதி வாக்குறுதி கொடுத்தார். ஆனால் எதுவும் நடைபெறவில்லை.

இதனை தமிழ் பேசும் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக் குழுவின் செயலாளர் திரு. எஸ் விஜயானந்தன் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

1983 ஜூலையில் தான் தமிழினப் படுகொலை ஆரம்பித்தது என்பதல்ல. ஆனால் அந்தக் காலகட்டத்தில் தான் இவ் வன்செயல் கூர்மையடைந்தது.

—இவ்வாறு தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சார்ந்த திரு க தணிகாசலம் தமதுரையில் கூறினார்.

யாழ் ஒலி, ஒளி ஒன்றியத்தின் பிரதிநிதி திரு. வசீகரன், வர்த்தகர் சங்கப் பிரதிநிதி திரு. க நமசிவாயம், யாழ் செயலக ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு கே. கனகரட்ணம், பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கப், போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பிரதிநிதி திரு ஐ. சாந்தன், வடமாகாண ஆசிரியர் சங்கப் பிரதிநிதி திரு வே. சிவராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (உ-9)

## உதவி அரச அதிபரும் 6 கிராம சேவகர்களும் கடத்தப்பட்டு விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் ஒருவரும் ஐந்து கிராம சேவகர்களும் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றபோது கடத்தப்பட்டார்கள்.

வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, ஆட்காட்டிவெளி, நெடுங்கண்டல், பாலம்பட்டி ஆகிய பகுதிகளுக்கான கிராம சேவகர்களும் அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு, எஸ். எம். குருஸாம் தள்ளாடி இராணுவ முகாமில் கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் அதில் கலந்து கொள்ள வெள்ளிகாலை 10 மணிக்குச் சென்ற பொழுது திருக்கேதீஸ்வரம் சந்தியில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்கள்.

பின்னர் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கடத்தப்பட்ட இடத்திலேயே அவர்கள் மீண்டும் விடப்பட்டார்கள்

(அ-ஒ)

## சிப்பாய்கள் மரணம்பற்றி விசாரணை

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலை - ஹபரனை வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை) பிற்பகல் நடைபெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் இறந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள், ஒரு சாரதி ஆகியோரின் மரணவிசாரணை நேற்று நடைபெற்றன.

பதில் நீதிவான் திரு. எம். கே. செல்லராசா மரண விசாரணை நடத்தினார்.

திருகோணமலையில் இருந்து சிப்பாய்கள் மூன்று வாகனங்களில் சென்று கொண்டு இருந்தபோது முதல் வாகனம் நிலக்கண்ணியில் சிக்கியது.

சிப்பாய்கள் ஜா சிங்க, ஆர் சில்வா ஆகியோர் உயிரிழந்தனர் வாகனச் சாரதியும் மரணமானார்.

(உ-எ-150)

## காட்டுச் சிறுவனின் வாழ்க்கை மர்மம்

கம்பாலா. ஜூன் 29

உகண்டாவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட அனாதைச் சிறுவனின் காட்டு வாழ்க்கை குறித்து எதுவித தகவல்களும் அறிய முடியவில்லை.

சுமார் ஐந்து வயது மதிக்கத்தக்க இப் பையனுக்கு 'ரோபேட்' என பெயரிடப்பட்டுள்ளது

ஜனசஞ்சாரமற்ற கொடிய மிருகங்கள் நிறைந்த காட்டுப்பகுதியில் இவன் எப்படி உயிர் வாழ்ந்தான் என்பது மர்மமாகவே இருக்கின்றது.

உகண்டாவில் பேசப்படும் பல்வேறு மொழிகளும் அவனுக்குப் புரியவில்லை. ஆனால் அவனது ஓசை அணில்களுக்கும் சிறு பறவைகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் புரிகின்றதாம்.

மிருகங்களைப் போல நான்கு கால்களில் நிற்பதிலும் புல்லை விரும்பி உண்பதிலும் இவன் ஆர்வமுடையவனாக் காணப்படுகின்றான் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ)

## பீரங்கிக் குண்டுகள் வீழ்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 30

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள கல்பொக்கை என்ற இடத்தில் நேற்று கடலிலிருந்து ஏவப்பட்ட பீரங்கி குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதனால் பலர் காயமடைந்தனர். சில வீடுகளும் கடைகளும் சேதமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

நேற்றுக்காலை கடற்பகுதியில் நங்கூரமிட்டிருந்த கப்பல்களில் இருந்தே இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-10)

## நீலன் கருத்து

லண்டன், ஜூன் 29

நிரந்தரத் தீர்வுக்குச் சகல தமிழ்ச் சக்திகளும் இணைந்து ஈடுபடவேண்டும் அப்படி இணைந்து செயல்படாவிட்டால் நிரந்தரமான தீர்வைக் காணமுடியாது

டாக்டர் நீலன் திருச்செல்வம் பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு சொன்னார்.

'தென் ஆசியா விமர்சனம்' என்ற தலைப்பில் இப்பேட்டி சனிக்கிழமை ஒலிபரப்பானது (உ-எ)

## விலகம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொப்டர் ஒன்றும் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இராணுவத் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

(உ-எ-150)

## சடலங்கள் கொண்டு வரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 30

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஹெலிக்கொப்டர், ஷெல் தாக்குதல்களின் போதும் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இருவரின் சடலங்கள் நேற்று டிராக்டர் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டன

இவர்களுள் ஒருவர் வின்சன்ட் யோசப் (68 வயது) எனவும்—

மற்றையவர் பரந்தன் வர்த்தகர் ஆறுமுகத்தின் மகன் எனவும் அறியவருகிறது

இந்த இரண்டு சடலங்களும் நேற்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (உ-10)

## இப்படிக் குற்றச்சாட்டு

சியோல், ஜூன் 29

தென்கொரிய அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் பெண்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பாலியல் தொல்லைகளுக்குள்ளாக்கப் படுகிறார்கள் என ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொரியா பெண்கள் பலர் நாடெங்கிலும்வழிமறியல் போராட்டம் நடத்தி வருகிறார்கள் (உ-ஒ)

## வெடிமருந்து..!

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். எமது தரப்பில் இழப்பு ஏதும் இல்லை

—தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## தவறிவிட்டது

இலக்கம் 628611483V உடைய அறிமுக அட்டை 29-06-86 இல் யாழ் இருந்து கச்சேரி செல்லும பொழுது இலக்கம் 35 ஸ்ரீ 724 மினி பஸ் வண்டியில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும்.

## 264 தமிழருக்கு என்ன...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசைகள் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்

அதேநேரத்தில் பூஸாவுக்கு அனுப்பப்படுவதற்காக திருமலைக் கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டு இருக்கும் தமிழர் எண்ணிக்கை குறித்து பாதுகாப்பு வட்டாரம் முன்னர் அனுப்பிய பட்டியலுக்கும் ஒருநாள் கழித்து அனுப்பிய பட்டியலுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாகவும் பிரசைகள் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது பட்டியலின்படி 497 பேர் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக பாதுகாப்பு வட்டாரம் கூறியது.

இரண்டாவது பட்டியலின்படி 488 பேர்தான் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக அறிவித்தது

அப்படியானால் அந்த 9 பேருக்கு என்ன நடந்தது?

இதுபற்றி திருமலை பிரசைகள் குழு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகின்றது.

தேடுதலின் போது கைதானவர்கள், விடுவிக்கப்பட்டவர்கள் பற்றி பாதுகாப்பு வட்டாரம் பிரசைகள் குழுவுக்கு முதலில் அனுப்பிய விவரம் வருமாறு:

கைதானவர்களின் மொத்தத் தொகை: 1036.

விடுவிக்கப்பட்டவர்கள்: 515

பூஸாவுக்கு அனுப்பத் தடுத்து வைக்கப்பட்டவர்கள்: 497.

"முகமூடி" தலையாட்டியதால் தடுத்து வைக்கப்பட்டவர்கள்: 24.

மொத்தம்: 1,036.

(உ-எ-150)

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

சுமார் ஒரு மணிநேரமாக நடத்தப்பட்ட இந்த ஷெல் தாக்குதல்கள் ஓய்ந்ததும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் தொடர்ந்து பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. (உ-10)


புங்குடுதீவில்

கோடி அற்புதங்கள் புரியும்

அருள்மிகு அந்தோனியார் ஆலயம்

வருடாந்த உற்சவம்



1986 ஆடி 4ஆம் திகதி வெள்ளி: கொடியேற்றம்
1986 ஆடி 5ஆம் திகதி சனி : நற்கருணை வழிபாடு
1986 ஆடி 6ஆம் திகதி ஞாயிறு : காலை 8-00 மணி
* திருப்பலி — நற்கருணைப்பந்தி
* அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி
* பஜனை.

பக்தர்கள் இவ் விழாவில் பங்குகொண்டு வழிபட்டு மருள் நீங்கி அருள் பெற்றுய்யுமாறு அழைக்கின்றோம்! புனிதரின் பேரால் அமைக்கப்படும் "தெய்வக் குழந்தைகள் இல்லத்" திற்கு உதவுமாறு அன்பர்களை — பக்தர்களைக் கோருகின்றோம்

அன்பளிப்பு:
VECO ELECTRICALS 4, Stanley Road, JAFFNA.
நேசன் ரெக்ஸ்ரையில்ஸ் புங்குடுதீவு.
கோணேஸ்வரி கூல் பார் புங்குடுதீவு.
ச. தில்லைநாதன் J.P.



விமானச்சிட்டுக்கள், பாஸ்போர்ட்
பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION RE-CONFIRMATION

தொலைபேசிச் சேவை ;
23364, 23866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2G, ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் . ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்ட திகதி 30—06—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15. Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 N 86


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org